# வருவாய்த்துறை அலுவலர் சங்கக்குரல்

# Varuvaithurai Aluvalar Sangakural

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாத இதழ்

Volume 35 February 2023 Issue 2



அனைத்து மாவட்ட நிர்வாகிகள் கையொப்பமிட்ட பெருந்திரல் முறையீட்டை பொதுச் செயலாளர் திரு.எஸ் சங்கரலிங்கம் வருவாய்த்துறை செயலாளர் அவர்களிடம் வழங்கினார்.



தனிப்பிரதி விலை ரூ.10/-
Per Copy Rs.10/-

ஆண்டு சந்தா ரூ.120/-
Annual Subscription Rs.120/-






5.1.2023 அன்று மதுரை மாவட்டத்தில் ஜாக்டோ-ஜியோ போராட்டத்தில் அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் மிக எழுச்சியாக கலந்து கொண்டனர். இதில் மாநிலத் தலைவர் எம்பி.முருகையன் உரையாற்றினார்.




சென்னையில் 8.1.2023 அன்று நடைபெற்ற ஜாக்டோ-ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தில் பங்கேற்று பேசிய மாநிலத் தலைவர் எம்.பி.முருகையன்

தலையங்கம்

# நம்பிக்கை இழந்தோம், உரிமை இழந்திடோம்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவர்களின் களப் பிரச்சனைகள் தொடர்பாகவும், வாழ்வாதார கோரிக்கைகள் தொடர்பாகவும் தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தின் மத்திய செயற்குழுவில் விவாதித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அரசிற்கு அளிக்கப்படுகின்றன. இக்கோரிக்கைகளில் அதிகமான தாமதம் இருக்கும் நேர்வுகளில் இயக்க நடவடிக்கைகளுக்கு திட்டமிடப்பட்டு கோரிக்கைகள் மீது தீர்வு காணப்பட்டு வருகின்றது.

வருவாய்த்துறை அலுவலர்களின் முக்கிய கோரிக்கைகள் தொடர்பாக 2022 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையிலான பேச்சுவார்த்தையில் முன்வைக்கப்பட்ட அனைத்து கோரிக்கைகளும் ஏற்கப்பட்டு முடிவுகள் எழுத்துபூர்வமாக வழங்கப்பட்டன. இதன்பின்பாக நமது கோரிக்கைகள் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களால் பரிந்துரைக்கப்பட்டு அரசிற்கு அனுப்பப்பட்டன.

இதில் வருவாய்த்துறை அலுவலர்களின் பதவி உயர்விற்கான பவானிசாகர் மற்றும் நிலஅளவைப் பயிற்சி, துறைத் தேர்வு தேர்ச்சி பெற்றமைக்கான முன்ஊதிய உயர்வு, அலுவலக உதவியாளர் காலியிடங்களை நிரந்தர அடிப்படையில் நிரப்பிட அரசின் இசைவு, தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் காலவரையற்ற வேலை நிறுத்தக் காலம் வரன்முறை, தேர்தல் நிதி ஒதுக்கீடு ஆகியவற்றில் சில முன்னேற்றம் ஏற்பட்டாலும் முக்கிய கோரிக்கைகளான துணை வட்டாட்சியர் பட்டியல் திருத்தின் காரணமாக பணியிறக்கம் பெறும் அலுவலர்களின் பதவி உயர்வு, பாதுகாப்பு அரசாணை, துணை ஆட்சியர் பதவி உயர்வு, இளநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் முதுநிலை வருவாய் ஆய்வாளர் பதவி பெயர் மாற்றம் விதி திருத்தம் அரசாணை உள்ளிட்டவற்றில் இதுகாறும் தீர்வு காணப்படாமல் உள்ளது.

இக்கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 24.1.2023 அன்று சென்னையில் நடைபெற்ற பெருந்திரள் முறையீட்டில் 38 மாவட்டத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டது நமது ஒற்றுமையை அரசிற்கு பறைசாற்றுவதாக அமைந்தது. தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் இயக்க பலத்தை உணர்ந்தே பேச்சுவார்த்தைகளில் தீர்வு காணப்படுகிறது. துறை சார்ந்த கோரிக்கைகளில் சாதகமாக நிலை உள்ள போதிலும், அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களின் பொதுவான கோரிக்கைகளான பங்களிப்பு ஓய்வூதியத்தை இரத்து செய்தல், ஒன்றிய அரசு ஊழியர்களுக்கு இணையான அகவிலைப்படி உயர்வு, பறிக்கப்பட்ட ஈட்டிய விடுப்பு ஒப்படை ஊதியம் ஆகியவற்றில் முன்னேற்றம் இல்லாத நிலையே உள்ளது.

டிசம்பர் 2022 தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநாடு, செப்டம்பர் 2022 ஜாக்டோ-ஜியோ மாநில மாநாடுகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரடியாக கலந்து கொண்டு மீண்டும் வாக்குறுதிகள் அளித்துள்ளாரே தவிர ஊழியர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து கோரிக்கைகளை நிறைவேற்றவில்லை.

மாறாக, தமிழக நிதித்துறை அமைச்சர் அவர்கள் தொடர்ந்து அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு எதிராகவும், கோரிக்கைகளை நிறைவேற்ற முன்வராமல் ஊடகங்களில் கொச்சைப்படுத்துவது என்பது அரசு ஊழியர்கள்-ஆசிரியர்களை கொந்தளிக்கச் செய்துள்ளதுடன், மனவேதனை அளித்துள்ளது. போராட்ட களங்களுக்கு வந்து

ஆதரவளித்தவர்கள் ஆட்சிக்கு வந்து ஈராண்டு ஆகும் நிலையில் மௌனம் காப்பதும், மறுதளிப்பதும் அரசு ஊழியர்கள்-ஆசிரியர்களை மிகுந்த ஏமாற்றமடையச் செய்துள்ளது.

1988 முதல் போராட்ட வெற்றி வரலாற்றை கொண்டு அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள், அரசின் மீதும் மாண்புமிகு முதலமைச்சர் மீதும் நம்பிக்கை இழந்தாலும், தங்களது உரிமைகளை இழக்க தயாராக இல்லை. போராட்டம் என்னும் ஆயுதம் கொண்டு வாழ்வாதார உரிமைகளை அனைத்தையும் மீட்டெடுக்க உறுதிபூண்டுள்ளனர். இனி நமக்கு போராட்டம் ஒன்றே தீர்வாகும்! முன்னேறுவோம்! ■

---

மாநில செயற்குழு கூட்ட முடிவுகள்

# TNROA மாநில நிர்வாகிகள் கூட்ட முடிவுகள் 11.2.2023 - ராமநாதபுரம்

தமிழ்நாடு வருவாய்துறை அலுவலர் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் கூட்டம் 11.2.2023 அன்று ராமநாதபுரம் "ஜனார்தன் மாளிகையில்" மாநிலத் தலைவர் திரு.எம்.பி.முருகையன் தலைமையில் நடைபெற்றது. ராமநாதபுரம் மாவட்டத் தலைவர் திரு.பழனிகுமார், மாவட்டச் செயலாளர் திரு.தமீம்ராஜா உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகள் அனைவரையும் வரவேற்றனர். முதல் நிகழ்வாக TNROA சங்கக்கொடி ஏற்றப்பட்டு இனிப்புகள் வழங்கப்பட்டது. பொதுச் செயலாளர் திரு.எஸ்.சங்கரலிங்கம் கடந்த கால நடவடிக்கைகள் மற்றும் கோரிக்கைகளின் நிலை குறித்து எடுத்துரைத்தார்.

மாநில நிர்வாகிகளின் கருத்துரை & விரிவான விவாதங்களுக்கு பின்பாக கீழ்க்கண்ட முடிவுகள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

1) துணை வட்டாட்சியர் பட்டியல் திருத்தத்தின் காரணமாக பணியிறக்கம் பெறும் அலுவலர்களின் பதவி உயர்வு பாதுகாப்பிற்கான அரசாணையை 1 மாத காலத்திற்குள் வெளியிட வருவாய்த்துறை செயலாளர் அவர்களை வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

2) மூன்று ஆண்டுகளுக்கான துணை ஆட்சியர் பதவி உயர்வு பட்டியலை உடனடியாக வெளியிட வேண்டும். வருவாய்த்துறை அலுவலர்கள் பணிபுரிந்து வரும் அனைத்து பணியிடங்களையும் பாதுகாத்திட அரசு நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

3) இளநிலை வருவாய் ஆய்வாளர் & முதுநிலை வருவாய் ஆய்வாளர் ஆகிய பணியிடங்களின் பெயர் மாற்றம் விதித்திருந்த அரசாணையை மேலும் காலதாமதம் செய்யாமல் உடன் வெளியிட தமிழக அரசை வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

4) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் பணிப்பளு மற்றும் பணித் தன்மையை கருத்தில் கொண்டு அனைத்து நிலை அலுவலர்களுக்கும் "மேம்படுத்தப்பட்ட ஊதியம்" & தனி ஊதியம் வழங்கிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

5) வருவாய்த் துறையில் உள்ள அலுவலக உதவியாளர் காலியிடங்களை ஏற்கனவே வெளியிடப்பட்ட இரு அரசு கடிதங்களின் அடிப்படையில் உடன் நிரப்பிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் மாவட்ட மாறுதல் நிலுவை இனங்களை உடனடியாக ஆணையிட வருவாய் நிர்வாக ஆணையரை வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

7) வட்ட அலுவலகங்களில் பணிப் பளுவினை குறைக்கும் பொருட்டு சான்றிதழ் பணிக்கென பிரத்யேகமாக துணை வட்டாட்சியர் (சான்றிதழ்) பணியிடத்தை உருவாக்கிட அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

8) வருவாய்த் துறையில் தற்காலிக பணியிடங்களுக்கான ஊதியம் பெறுவதில் உள்ள பிரச்சனைகளை உடன் களைந்திடவும், பணியிடங்கள் குறைப்பு செய்யும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதென முடிவு செய்யப்பட்டது.

9) 16.8.2022 மற்றும் 1.11.2022 ஆகிய தேதிகளில் அரசு மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து கோரிக்கைகளின் (மாவட்டம் சார்ந்த கோரிக்கைகள் உட்பட) மீதும் உடன் ஆணைகள் வழங்கிட வேண்டும்.

10) 2021 சட்டமன்றத் தேர்தல் நிதியினை நடப்பாண்டு திருத்திய மதிப்பீட்டில் வழங்கிட வேண்டும் மற்றும் வாக்காளர் பட்டியல் திருத்த பணிக்கு சிறப்பு பணியிடங்கள் ஏற்படுத்த முதன்மை தேர்தல் அலுவலரை நேரில் வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

11) நடப்பாண்டிற்கான மாவட்ட வருவாய் அலுவலர் பட்டியலை உடன் வெளியிடவும், மாநில குடிமை பணியில் வருவாய்த்துறை அலுவலர்களின் விகிதாச்சாரத்தை குறைத்திடக்கூடாது என அரசு தலைமைச் செயலாளரை வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

12) மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான அகவிலைப்படி உயர்வினை தாமதம் இன்றி வழங்கிட வேண்டும், CPS திட்டத்தை ரத்து செய்ய வேண்டும், ஈட்டிய விடுப்பு சரண் ஊதியம் வழங்க வேண்டும், வெளிமுகமை (outsourcing) முறையை கைவிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

13) 2023ஆம் ஆண்டிற்கான இணைப்பு கட்டணம், சங்கக்குரல் சந்தா ஆகியவற்றை 100% நிறைவு செய்து அடுத்த மத்திய செயற்குழுவில் வழங்கிடும் பொருட்டு, வருகின்ற 20.2.2023 முதல் 3.3.2023 வரை அனைத்து மாவட்டங்களில் "உறுப்பினர் சேர்க்கை இயக்கம்" நடத்துவது எனவும், இதில் மாநில நிர்வாகிகள் கலந்து கொள்வதெனவும் முடிவு செய்யப்பட்டது.

14) தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் அடுத்த மத்திய செயற்குழு கூட்டத்தை, 2023 மார்ச் இரண்டாவது வாரத்தில் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

இறுதியாக மாநிலப் பொருளாளர் திரு.வெ.சோமசுந்தரம் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

மாநில நிர்வாகிகள் கூட்டத்திற்கு பின்பாக ராமநாதபுரம் மாவட்டம் சார்ந்த இனங்கள் குறித்து மாவட்ட நிர்வாகிகளுடன் கலந்து ஆலோசனை செய்யப்பட்டு தீர்வு காணப்பட்டது.


ஸ்தாபனம் சார்ந்த முடிவுகள், கூட்ட நடவடிக்கை குறிப்புகள் தனியே அனுப்பி வைக்கப்படும்.

## தொடர்ந்து முயல்வோம், வெல்வோம்!

மாநில மையம்,
தமிழ்நாடு வருவாய்துறை அலுவலர் சங்கம் (TNROA).

■

கட்டுரை



# மாவீரன் சுகதேவ்

ஒரு புரட்சிக்கு மக்களிடம் பிரச்சாரம் செய்வதோடு இளைஞர்களுக்கு அரசியல் கல்வி புகட்டுவது அவசியம் என்பதை பகத்சிங்கும், சுக தேவும் நன்கு உணர்ந்திருந்தனர். பின்பு பஞ்சாப் மாநில இளைஞர்களுக்கு அரசியல் கல்வி புகட்டும் பணி சுகதேவிடம் ஒப்படைக்கப்பட்டது. அவரும் அப்பணியை ஒழுங்காகவும் வெற்றிகரமாகவும் நீண்ட காலம் செய்துவந்தார். எத்தகைய வேலை கொடுத்தாலும் அதை தயங்காது செய்து முடிக்கும் சுபாவமும், ஆற்றலும் கொண்டவர். எல்லா பணிகளையும் நானே செய்வேன் ஆனால் கிடைக்கும் புகழ் அனைத்தையும் நாட்டுக்கே சேர்ப்பேன் என்பது அவரது கோட்பாடாகவே இருந்தது. போலீஸ் அதிகாரி சாண்டர்ஸ் கொலை உள்ளிட்ட லாகூர் சதி வழக்குக்காக 1929ஆம் ஆண்டு ஏப்ரல் 15-ல் சுகதேவை போலீசார் கைது செய்தனர். சிறைக்குள்ளும், நீதிமன்றத்திலும் பகத்சிங் தலைமையில் நடந்த அனைத்துப் போராட்டங்களிலும் சுகதேவ் உறுதியாக நின்றார். அடக்குமுறைகளையும் சித்திரவதைகளையும் புன்முறுவலோடு ஏற்றுக்கொண்டார். பகத்சிங்கின் வரலாற்றுடன் தன்னை இரண்டறக் கலந்து இணைத்துக் கொண்டார்.

பகத்சிங் அரசியல் தலைவரென்றால், சுகதேவ் ஒவ்வொரு செங்கல்லாக வைத்துக் கட்டடத்தை கட்டி அமைத்த அமைப்பாளர் ஆவார். சுகதேவ் முரட்டுத்தனமானவர் என்று பெயரெடுத்தவர். ஒருமுறை ஒரு முடிவெடுத்து விட்டால் அதன்பின் உலகின் எந்த சக்தியாலும் அவரை மாற்ற முடியாது. ஆனால் தோழர்கள் விமர்சித்தால் தனது முடிவிலிருந்து பின் வாங்கிவிடுவார்.

தன் லட்சியங்களைத் தவிர வேறு எதற்கும் முக்கியத்துவம் அளிக்க மாட்டார். நல்ல உணவு, உடை, நட்பு, காதல் எல்லாவற்றையும் அவர் விரும்பினாலும் இவையனைத்தும் லட்சியத்திற்கு அடுத்தபடியானவை என்பது அவரது கருத்து. தனிப்பட்ட முறையில் பகத்சிங்கை அவர் மிகவும் நேசித்தார். தனது அன்பு முழுவதையும் அவருக்கே வாரி வழங்கினார் என்றால் அது மிகையாகாது. ஆக்ராவிலோ குவாலியரிலோ அவர்கள் இருவரும் சந்தித்துக் கொண்டால் இருவரும் ஒருவரையொருவர் கட்டியணைத்துக் கொள்வார்கள். இரவு பகலாக விவாதிப்பார்கள். ஆனால், சுகதேவ் அவசியம் என்று கருதிய போது தனது அருமை தோழர் பகத்சிங்கையே மரண வாயில் தள்ளவும் தயங்கவில்லை. நாடாளுமன்றத்தில் பகத்சிங் தான் குண்டு வீச வேண்டுமென்று முடிவெடுக்க வைத்தவர் சுகதேவ். பகத்சிங்கை நாடாளுமன்றத்தில் குண்டு வீச அனுப்பிவிட்டு சுகதேவ் அழுது தவித்தார். பகத்சிங் மீது அவர் வைத்திருந்த அன்பு மகத்தானது. அவரது தவிப்பை தனது டைரி குறிப்பில் எழுதி வைத்தார். அதை வந்தே மாதரம் என்ற பத்திரிக்கை 10.04.1931 “அமரத் தியாகி பகத்சிங்-தோழர் சுகதேவ் பார்வையில்” என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது.

பகத்சிங் ஏராளமாய் படித்துக் குறிப்புகள் எடுப்பார். சுகதேவ் வாசிப்பதோடு சரி குறிப்பு எடுப்பதில்லை. ஆனால், அபாரமான ஞாபக சக்தி படைத்தவர். படித்த விஷயங்களை உள்வாங்கி அதை வீரியத்துடன் சொல்லும் ஆற்றல் பெற்றவர். பகத்சிங்குக்கு அடுத்தபடியாக சோசலிசம் பற்றி அதிகமாய் படித்தவரும், சிந்தித்தவரும் சுகதேவ். அதனால் தான், அவர்

கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட போதும் யாரையும் காட்டிக்கொடுக்கவில்லை. சுகதேவ் போலீசிடம் எதையும் மறைக்கவில்லை. நாங்கள் அதையெல்லாம் செய்யத்தான் செய்வோம். உன்னால் முடிந்ததை செய்து கொள் என்பதுதான் அவரது பதில்.

வழக்கு விசாரணையில் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள எந்த முயற்சியும் செய்யவில்லை. பகத்சிங்கோடு இணைந்து தங்கள் புரட்சிக் கட்சியின் கருத்துக்களை பிரச்சாரம் செய்வதில் மட்டுமே கவனமாய் இருந்தார். பகைவர்களின் நீதிமன்றத்திலிருந்து நீதியை எதிர்பார்ப்பது முட்டாள்தனம் என்பது அவரது கருத்து. பகை வர்க்கத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து அவர் ஒருபோதும் நட்பையோ நல்லெண்ணத்தையோ விரும்பவில்லை. அவர்களிடம் சுகதேவ் அன்பு பாராட்டியதுமில்லை. போலீசாரோடும் சிறை அதிகாரிகளோடும் கைகலப்பு நடைபெறும் போது சிரித்துக்கொண்டே அவர்களை தாக்குவார். அவர்களிடமிருந்து அடி வாங்குவதும் அவருக்கு படுகுஷியான விஷயம்தான்.

சுகதேவின் சக தோழரான சிவவர்மா அவரைப் பற்றி சுகதேவ் "மலரைக் காட்டிலும் மென்மையானவர் கடும் பாறையைக் காட்டிலும் உறுதியானவர். அச்சம் அவரை அண்டியதே இல்லை. பகைவர்களோடு அவருக்குச் சமரசமே இல்லை. தோழர்கள் மீது அவர் அன்பையும் பரிவையும் செலுத்தி அவர்களைப் போற்றிப் பாதுகாத்தவர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

1946ஆம் ஆண்டில் தொழிலாளி வர்க்கத்தின் பொது வேலை நிறுத்தப் போராட்டங்கள் நடந்தன. அதைத் தொடர்ந்து பொதுமக்கள் பேரலைகளாய் தெருக்களில் இறங்கினார்கள். அதை தொடர்ந்து கப்பற்படையும் ராணுவமும் களமிறங்கியது. அதன் பிறகுதான் பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறும் முடிவுக்கு வந்தனர். இந்த வரலாற்றுப் பேருண்மையை மறைத்துவிட்டு ஏதோ கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று செய்ததால் சுதந்திரம் வந்தது என்று கதைப்பது வரலாற்றை மூடி மறைக்கும் முயற்சியாகும். அவர்களுடைய லட்சியம் தேச விடுதலை சோசலிச சமூக மாற்றம் தான். அவர்கள் மீதும் மக்கள் மீதும் பிரிட்டிஷ் ஆட்சி ஏவிய வன்முறையாலேயே வன்முறையை சந்தித்தார்கள், அவ்வளவுதான். தாக்கினால் திருப்பித் தாக்குவது இயற்கையானது. ஜனநாயகமும் சமத்துவமும் வன்முறையால் பறிக்கப்படும் போது அதை வன்முறையால் மீட்க முயற்சிப்பது இயற்கையானது.

டெல்லி நாடாளுமன்றக் கூட்டத்துக்குள் வெடிகுண்டு வீசிய போது கூட அவர்கள் தனி மனிதர்கள் யாரையும் கொலை செய்ய நினைக்கவில்லை. அவர்கள் நினைத்திருந்தால் கமிஷனாக வந்திருந்த சைமன் உட்பட பலரைக் கொன்றிருக்க முடியும். இதை காந்தியார் உட்பட அனைவரும் புரிந்துகொள்ள வேண்டுமென்று பகத்சிங் விரும்பினார். எத்தனையோ போலீஸ் அதிகாரிகள் இருக்கும்போது சாண்டர்சை மட்டும் ஏன் கொலை செய்தார்கள்? பஞ்சாப் சிங்கம் என்று போற்றப்பட்ட லாலா லஜபதிராய் போன்ற ஒரு ஒப்பற்ற தலைவரை நடுத்தெருவில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் முன்னால் அராஜகமாக அடித்துக் கொன்றார்கள். அதற்குப் பிறகும் யாருக்கும் ஆத்திரம் பிறக்கவில்லை என்றால் இது என்ன நாடா? அதையே பகத்சிங் நீதிமன்றத்தில் கூறினார்.

புரட்சிக்காரர்கள் நம் தாய்த் திருநாட்டில் சுதந்திர ஒளியை ஏற்றி வைப்பதற்கு தங்களையே மெழுவர்த்திகளாய் அழித்துக் கொண்டார்கள். பகத்சிங்-ராஜகுருவை தொடர்ந்து சுகதேவ்-ம் தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்பட்டார். தூக்குமேடை ஏறியபோது அந்த இளஞ்சிங்கத்தின் வயது 24 தான்.

**- இரா.மங்களபாண்டியன்**
மாநில துணைத்தலைவர்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் முதுநிலை வருவாய் ஆய்வாளர்கள் கணக்கு தேர்வு பாகம் 1ல் தேர்ச்சி பெற்றமைக்கான முன்ஊதிய உயர்வு (Advance Increment) வழங்குவது தொடர்பான கோரிக்கை, வருவாய்த்துறை, மனிதவள மேலாண்மைத்துறை மற்றும் நிதி துறையில் தொடர்ந்து காலம் தாழ்த்தப்பட்டு வந்த நிலையில், தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் தொடர் முயற்சியின் காரணமாக இவ்வாணைகள் தற்போது பெறப்பட்டுள்ளது.

இதன் காரணமாக மாநிலம் முழுவதும் 450 முதுநிலை வருவாய் ஆய்வாளர்கள் பயன்பெறுவர்.

அரசு கடிதம்

வருவாய் மற்றும் பேரிடர்
மேலாண்மைத் துறை,
பணிகள் அலகு, பணி-6(1) பிரிவு,
தலைமைச் செயலகம்,
சென்னை-600009.

கடித எண்.11710/பணி-6(1)/2021, நாள் 09.01.2023

அனுப்புநர்
திரு. குமார் ஜயந்த், இ.ஆ.ப.,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர்
வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை- 5. (இணைப்புடன்)

அய்யா,

பொருள் : பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை மற்றும் அனைத்து மாவட்ட வருவாய் அலகுகள் - 10.03.2020-க்குமுன் சார்நிலை அலுவலர்களுக்கான கணக்கு தேர்வு பாகம் -I தேர்ச்சிப் பெற்றது - முன்ஊதிய உயர்வு வழங்கப்படாதது - ஊதிய உயர்வு வழங்கக் கோரியது தெளிவுரை வழங்குவது - தொடர்பாக.

பார்வை : தங்கள் கடித எண்.ந.க.எண்.பணி.4(1)/36965/2020, நாள் 26.03.2021.

***

பார்வையில் காணும் கடிதம் தொடர்பாக தங்களின் கனிவான கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. இந்நேர்வு குறித்து பின்வருமாறு தெளிவுரை வழங்கப்படுகிறது

i. தமிழ்நாடு அமைச்சுப் பணிகளில் உள்ள பணியாளர்களுக்கான அடிப்படை விதி 31A-ன் கீழுள்ள விதித்துளி (3) மற்றும் (4)-ன்படி, கணக்குத் தேர்வு பாகம்- Iல் தேர்ச்சி பெற்றவர்களுக்கு முன்ஊதிய உயர்வு வழங்கப்பட்டு வருகிறது. அரசாணை (நிலை) எண்.37,

பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்த (அவி.IV) துறை, நாள் 10.03.2020 வெளியிட்டபிறகு, தட்டச்சர், இளநிலை உதவியாளர், சுருக்கெழுத்து தட்டச்சர், உதவியாளர் ஆகியோருக்கு அவர்கள் 10.03.2020-க்கு முன்னர் கணக்குத் தேர்வு பாகம் - Iல் தேர்ச்சி பெற்றிருந்தால், அவர்களுக்கு அடிப்படை விதி 31-கின் கீழுள்ள விதித்துளி (3) மற்றும் (4)-ன் நிபந்தனைகள் நிறைவடையும் நேர்வில், இதனை உறுதி செய்து அவர்களுக்கு முன் ஊதிய உயர்வு வழங்கக் கருதலாம்.

ii. அரசுக் கடித எண்.7358/அவி.IV/2005-13, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்த (அவி.IV) துறை, நாள் 21.08.2008-ல் உள்ள தெளிவுரைகளை தட்டச்சர்கள் / சுருக்கெழுத்து தட்டச்சர்கள் பின்பற்ற வேண்டும்.

iii. கணக்குத் தேர்வு பாகம்-1 எழுதியதற்கான தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகள், தேர்ச்சி பெற்றதற்கான அரசிதழ் அறிக்கையின் நகல்கள் (TNFSC Bulletin copy) மற்றும் அப்பணியாளர்கள் சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம் I-ல் தேர்ச்சி விவரங்கள் பதியப்பட்ட பணிப்பதிவேட்டின் நகல்கள் ஆகியவற்றையும் கோப்பினில் வைத்து துறையளவில் ஆய்வு செய்து அத்தனியர்கள் கணக்குத் தேர்வு பாகம்-I தேர்வு எழுதிய நாளுக்கு மறுநாள் முதல் அல்லது அரசுப் பணியில் சேர்வதற்கு முன்பே கணக்கு தேர்வு பாகம்-1 தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளாராயின் அவர்களுக்கு அரசு பணியில் சேர்ந்த நாள் முதல்) இவற்றில் எது பின்னரோ (whichever is later) அந்நாள் முதல் முன் ஊதிய உயர்வு வழங்கவேண்டும்.

அல்லது

iv. மேலும் சார்நிலை அலுவலர்களுக்கான கணக்கு தேர்வு பாகம் - 1 தேர்வில் தேர்ச்சி பெற்ற பணியாளர்களுக்கு முன்ஊதிய உயர்வு வழங்கி 31.08.2021க்குன் ஆணை வெளியிடப்படவேண்டும் என காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அக்காலக்கெடுவான 31.03.2021-க்குள் முன்ஊதிய உயர்வு வழங்க இயலாத தகுதி வாய்ந்த நேர்வுகளுக்கு அரசாணை (நிலை) எண்.116, பணியாளர் மற்றும் திருவாக சீர்திருத்த (அவி.IV) துறை, நாள் 15.10.2020-ல் வெளியிடப்பட்ட அரசாணைக்கிணங்க இந்தேர்விற்கும் மேற்குறிப்பிட்ட காலகெடுவிற்கு விலக்களிக்கலாம்.

v. மேலும், இனிவரும் காலங்களில் கணக்குத்தேர்வு பாகம்-1 தேர்வில் தேர்ச்சி பெற்றதற்கு முன் ஊதிய உயர்வு வழங்குவதற்கு கருத்துருக்களை காலம் கடந்து அனுப்புவதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

vi. அரசாணை (நிலை) எண்.116, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்த (அவி.IV) துறை, நாள் 15.10.2020-ல் குறிப்பிடப்பட்ட 31.03.2021 காலக்கெடுவிலிருந்து விலக்களித்து மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.3657639/அ.வி.IV/2022, நாள் 20.12.2022ல் பெறப்பட்ட இசைவுடன் இக்கடிதம் வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளருக்காக

நகல்
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9
உதிரி/இருப்புகோப்பு.

ஜாக்டோ–ஜியோ போராட்ட இயக்கங்கள்

# மூன்று கட்டப் போராட்டங்கள் ஜாக்டோ-ஜியோ அறிவிப்பு

தமிழக அரசுக்கு எதிராக உண்ணாவிரதம், மனிதச் சங்கிலி உள்ளிட்ட மூன்று கட்டப் போராட்டங்களை நடத்தவுள்ளதாக ஜாக்டோ - ஜியோ மாநில ஒருங்கிணைப்புக் குழு அறிவித்தது.

புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்வது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, அடுத்தகட்ட போராட்ட நடவடிக்கைகள் குறித்து ஜாக்டோ-ஜியோ அமைப்பின் மாநில ஒருங்கிணைப்புக் குழு உயர்நிலைக் குழுக் கூட்டம் மதுரையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில்,ஜாக்டோ-ஜியோ நிர்வாகிகள் பங்கேற்றனர். கூட்ட முடிவில், ஜாக்டோ-ஜியோவின் அடுத்த கட்ட போராட்டங்கள் குறித்து மாநில ஒருங்கிணைப்பாளர்கள் மு.அன்பரசு, பொன்.செல்வராஜ், ச.மயில் ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும். மத்திய அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி அறிவிக்கப்படும்போது மாநில அரசு ஊழியர்களுக்கும் அறிவிக்க வேண்டும். சத்துணவு ஊழியர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள், ஊராட்சிச் செயலர்கள், எம்ஆர்பி செவிலியர்களை நிரந்தரப் பணியாளர்களாக அறிவித்து காலமுறை ஊதியம் வழங்க வேண்டும். விடுப்பு ஒப்படைப்பு சலுகை, உயர் கல்வி ஊக்கத்தொகையை மீண்டும் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை ஆட்சிக்கு வந்ததும் நிறைவேற்றுவதாக திமுக அறிவித்தது.




தற்போது ஆட்சிக்கு வந்து 20 மாதங்களாகியும், அதிமுக அரசு தற்காலிகமாக நிறுத்தி வைத்த பல்வேறு உரிமைகளை திமுக அரசு நிரந்தரமாக ரத்து செய்தது. கடந்தாண்டு நடைபெற்ற அரசு ஊழியர்களின் வாழ்வாதார மாநாட்டில் பங்கேற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின்,திமுக தேர்தல் அறிக்கையில் தெரிவித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக உறுதியளித்தார். ஆனால், தற்போது வரை கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

எனவே, வரும் பிப்ரவரி 12ஆம் தேதி மாவட்டத் தலைமையிடங்களில் போராட்ட ஆயத்த மாநாடு, மார்ச் 5ஆம் தேதி மாவட்டத் தலைமையிடங்களில் உண்ணாவிரதப் போராட்டம் ஆகியவை நடத்தப்படவுள்ளன.

தொடர்ந்து மார்ச் 24ஆம் தேதி வட்டார, மாவட்டத் தலைமையிடங்களில் 20 ஆயிரம் கி.மீ. மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்தப்பட உள்ளது. இந்த மூன்று கட்டப் போராட்டங்களுக்கு பின்னரும் அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் தொடர் வேலைநிறுத்தம், குடும்பத்தோடு போராட்டம் என அடுத்த கட்டப் போராட்டங்கள் நடத்தப்படும் என்றனர்.

■

கட்டுரை

# இனி, சர்வமும் சாட்ஜிபிடி மயமாகிவிடுமா?




**சா**ட்ஜிபிடி (ChatGPT) எனும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் வரவு, சாதகமா பாதகமா என்பதுதான் இன்றைக்குப் பல தளங்களிலும் விவாதிக்கப்படும் விஷயம். மருத்துவ இறுதித்தேர்வின் எல்லா கேள்விகளுக்கும் அரை மணி நேரத்தில் சரியான விடையளித்து மலைக்கவைத்த சாட்ஜிபிடி, ஆயிரக்கணக்கான மென்பொருள் நிரல் (Coding) எழுதும் பொறியாளர்களை வீட்டுக்கு அனுப்பி மிரட்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது. பல்வேறு விதங்களில் இதன் பயன்பாடு குறித்த வாதப் பிரதிவாதங்கள் நடக்கின்றன. நிதர்சனம் என்ன?

### கூகுளைவிடக் கூடுதலாக

கூகுளுக்குச் சென்று கேள்வியைத் தட்டச்சு செய்கிறோம் அல்லவா? அது ஒரு மென்பொருள்; அதுவும் ஒருவகை செயற்கை நுண்ணறிவுதான். 'ராண்டம் சர்ச்' (Random Search) எனப்படும் 'பேஜ் ரேங்க் அல்காரித'த்தைக் (இணையப் பக்கத் தரவரிசை அல்காரிதம்) கூகுள் பயன்படுத்துகிறது. இணையம் முழுவதும் தேடி, பொருத்தமான தரவுகள் எங்கெல்லாம் உள்ளன என்பதைத் தேர்வுசெய்து எடுத்துவந்து திரையை நிரப்பும்போது, அதுவே ஒரு தரப்பட்டியலையும் (Ranking) தயாரித்து அதன்படி வரிசைப்படுத்துகிறது.

அவ்விதம் செய்யும்போது, அது ஐந்து வகையாகச் செயல்படுகிறது: 1) முதலில் நம் உள்ளீட்டை இயற்கையான பொருளில் ஏற்று, அதன் அடிப்படையில் செயல்படுகிறது; 2) கேட்பவரின் தேவை என்னவாக இருக்கலாம் என்பதைக் கணிக்கிறது; 3) நாம் ஏற்கெனவே தேடியவற்றை வைத்து நமது தேடலின் வகைப்பாட்டைத் தீர்மானிக்கிறது; 4) திரட்டிய பல்வேறு இணையத் தரவுகளை வரிசைப்படுத்தும்போது தேதி - காலம் அடிப்படையில் சமீபத்திய விஷயம்

முதலில் வருமாறு வரிசைப்படுத்துகிறது; 5) சொற்களின் அடிப்படையில் வரிசைப்படுத்துதல் என அந்த அல்காரிதம் செயல்படுகிறது. கூகுள் தேடுபொறி வழங்கும் தரவுகளைக் கொண்டு நாம் நமது தேடலை நிறைவுசெய்கிறோம்; திருப்தி இல்லையெனில் மீண்டும் தொடர்கிறோம்.

ஆனால், சாட்ஜிபிடி அந்த எல்லா வேலைகளையும் தானே செய்து 'இறுதி விடை'யை மட்டும் நமக்கு வழங்குகிறது. மனித வேலையை ரோபாட் செய்துவிடுவதே 21ஆம் நூற்றாண்டின் முன்னெடுப்பாக இருக்கும் என்பது மிச்சியோ காகு (Michio Kaku) உள்ளிட்ட பல அறிஞர்கள் கணித்ததுதான்; சாட்ஜிபிடி அதை நிதர்சனமாக்குகிறது. கூடவே, பல துறைகளில் வேலையிழப்பு ஏற்படலாம் எனும் எச்சரிக்கை மணியும் ஒலிக்கிறது.

## தேடுதலில் தெளிவு

சாட்ஜிபிடி எப்படிச் செயல்படுகிறது என எல்லாரையும்போல் சமீபத்தில் நானும் வெள்ளோட்டம் பார்த்தேன்: கூகுள், சாட்ஜிபிடி இரண்டிடமும் ஒரே கேள்வியைக் கேட்டேன். நான் கேட்டது மிக மிகச் சுலபமான கேள்வி: 'ஒரு கைபேசி வாங்க வேண்டும்... என்ன செய்யலாம்?' இதை கூகுள் எதிர்கொண்டு மொத்தம் 1,64,760 தரவுகளைக் கொண்டுவந்து கொட்டியது. சாட்ஜிபிடி அப்படி எதுவும் செய்யவில்லை. 'நீங்கள் இந்தியாவில் இருக்கிறீர்கள்.

நாளை மறுநாள் பட்ஜெட் தாக்கல் செய்யப்படுகிறது. விலை மற்றும் வரிவிதிப்பில் மாறுபாடுகள் வரலாம். கைபேசி வாங்குவதை இரண்டு நாள்களுக்குத் தள்ளிப்போடுவதே நல்லது. இருந்தாலும் கீழ்க்கண்ட விஷயங்களைப் பரிசீலிக்கலாம்' என ஒரு நான்கு பாரா திரையில் விரிந்தபோது நான் புன்னகைத்துக்கொண்டேன். நான் இருக்கும் தேசம் சாட்ஜிபிடிக்குத் தெரிகிறது. ஜிபிஎஸ் மூலம் கூகுளுக்கும் அது தெரியும்தான். ஆனால், என் பிரதேசத்தின் சமீபத்திய செய்தியை மிகுந்த புத்திக்கூர்மையுடன் பரிசீலிக்க சாட்ஜிபிடிக்குத் தெரிகிறது; ஆச்சரியம்தான்!

## சுய கற்றல் - மேம்படுத்துதல்

சாட்ஜிபிடியை உருவாக்கியது ஓபன்ஏஐ (OpenAI) எனும் நிறுவனம். எலான் மஸ்க், சாம் ஆல்ட்மன் ஆகியோர் 2015இல் உருவாக்கிய இந்நிறுவனம், 2020இல் இன்ஸ்ட்ரக்ட்ஜிபிடி (InstructGPT) எனும் தொழில்நுட்பத்தை உருவாக்கியது. இதன் அடுத்தகட்டம்தான் சாட்ஜிபிடி. 2018இல் எலான் மஸ்க் ஓபன்ஏஐ நிறுவனத்திலிருந்து விலகிவிட்டார்.

ஜிபிடி என்பது ஜெனரேட்டிவ் பிரீட்ரெய்ன்ட் டிரான்ஸ்ஃபார்மர் (Generative Pre-trained Transformer) எனும் செயற்கை நுண்ணறிவுச் செயலாக்கம் ஆகும். அதாவது, முன்பதிவு செய்யப்பட்ட தரவுகளின் அடிப்படையில் அலசி ஆராய்ந்து தரவேண்டிய ஒரு முடிவை எடுத்தல். இது ஒரு அரட்டை வகை மெய்நிகர் ரோபாட். தற்போதைக்கு அதன் அதிர்ச்சி அலைகளின் பரவசங்கள் - கூகுள் காலத்தில்கூட இல்லாத அங்கீகாரம் இதற்கு வழங்கப்படுவதற்கு முக்கியக் காரணம் ஒன்று உண்டு.

கணினி மென்பொருள் நிரலாக்கல் (Coding) விஷயத்தில் சாட்ஜிபிடி அதிசயச் சுரங்கம். புரோகிராம் எழுதுவதில் அதீதத் திறன் கொண்ட ஒரு வல்லுநர்போல மென்பொருள் ஆள்களுக்குத் திறம்படப் பணி செய்கிறது. பாதி கோடிங் கொடுத்தால்கூட மீதியைத் தானே இட்டு நிரப்பி இறுதி வடிவத்தைத் தந்துவிடுகிறது. செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் இந்த மெய்நிகர் ரோபாட், முழுதும் உரையாடல் (Text) அடிப்படையிலானது. ஏராளமான தரவுகளைச் சேமித்து வைத்துக்கொள்ள முடியும்.

ஏற்கெனவே சேமித்த தனது வாக்கியங்களின் வழியே கண நேரத் தேடலைச் செலுத்திப் புரிந்துகொள்ளும். ஒரு புதிய அல்காரிதத்தைப் பயன்படுத்தி நம் கேள்விகளுக்குப் பதில் சொல்கிறது. ஒருவேளை பதில் தவறு என்று நாம் பதிவிட்டால், மன்னிப்புக் கேட்கிறது. எது சரியான பதில் என்று நம்மிடமே கேட்டுப் பெறுகிறது. சாட்ஜிபிடியின் அற்புதம் இந்த விஷயத்தில்தான் அடங்கியிருக்கிறது. இது ஒரு சுயகற்றல் மேம்படுத்துதல் ரோபாட். பயனர்கள் தரும் கேள்விகளிலிருந்து அது தானாகவே கற்றுக்கொள்கிறது.

### காத்திருக்கும் சவால்கள்

ஆங்கிலத்தைத் தவிர, தமிழ் போன்ற மொழிகளில் சாட்ஜிபிடி வழங்கும் பதில்களின் வாக்கிய அமைப்புகளில் தவறுகள் உள்ளன. தற்போதைக்கு சாட்ஜிபிடி எதற்கெல்லாம் அதிர்ச்சி தரப்போகிறது என்று பார்ப்போம். சரியான அனுமானம் (Hypothesis) தரப்பட்டால், ஓரளவு தெளிவுடன் முழு ஆய்வு - அறிக்கையை (Thesis) வழங்கி, முனைவர் பட்டம் பெறுபவருக்கு 'உதவி' செய்யக்கூடும். சாதாரணப் பள்ளிக்கூட மாணவர் பாடப்பணி (Assignment) முதல் கல்லூரி-பல்கலைக்கழகத் தேர்வுவரை எல்லாமே இந்தத் தொழில்நுட்பத்துக்குச் சாத்தியம்.

தற்போதைக்கு அமெரிக்காவும் கனடாவும் கல்வித் துறையில் சாட்ஜிபிடியைத் தடை செய்துவிட்டன. இந்தியாவில் சென்னை ஐஐடி உட்பட சில கல்வி நிறுவனங்கள் விழித்துக்கொண்டிருப்பது தெரிகிறது. அருந்ததி ராய் போன்ற ஒரு மோடி எதிர்ப்பாளர், மோடியைப் பற்றி என்ன கட்டுரை எழுதுவார் என்று - வேறு எந்த உள்ளீடும் கொடுக்காமல் - கேட்டதற்கு சாட்ஜிபிடி படைத்துக் கொடுத்ததாக ஒரு கட்டுரையை வெளியிட்டு நகைச்சுவை செய்திருக்கிறது ஓர் இணையதளம்.

எல்லாம் சரிதான். ஆனால், சுய படைப்பாக்க வகையை இன்னும் அடையவில்லை. தற்போது செய்வது பெரும்பாலும் கருத்துத் திருட்டுதான் (Plagiarism). கூகுளுக்கும் அதற்குமான அடிப்படை வேற்றுமை இங்குதான் உள்ளது. கூகுள் போன்ற இணையத்தேடலின் மின்பொறி உங்களுக்கு எதைக் கொடுத்தாலும் அதன் உரிமம் அதைப் படைத்தவர் சார்ந்ததே. ஆனால், சாட்ஜிபிடி எல்லாவற்றையும் தன்னுடையதாக்கிவிடுவது பெரிய சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது.

### சாட்ஜிபிடி தாக்கத்தை ஏற்படுத்துமா?

சாட்ஜிபிடி உலகை மாற்றிவிடும் என்கிறார் பில் கேட்ஸ். இன்றைய தேதியில் இது மிக ஆபத்தான செயற்கை நுண்ணறிவு என்கிறார் எலான் மஸ்க். தனிமனித வாழ்க்கையில் தவிர்க்க முடியாத மாற்றத்தை ஏற்படுத்தும்போதுதான் எந்த ஒரு புதிய அம்சமும் வெற்றி பெறும். சாட்ஜிபிடி அப்படியான தாக்கத்தை ஏற்படுத்துமா? ■

ஆங்கில கட்டுரை

# Women Empowerment

The word ‘Women Empowerment’ itself implies that women are not powerful enough - they need to be empowered. This painful truth has been in existence for a long long time. It is in recent years that noticeable work started beginning to lift women out of the abyss of insignificance and powerlessness. The patriarchal society suppressed women’s freedom across the world. Women were not allowed to vote or even put forward any opinion. Women were confined to their homes. As time progressed, they realised that their life meant much more than just serving in the household. As more and more women started crossing the man-made barriers, the world began to witness the rise of women. Unlike men, women never try to stifle the voice of their opposite gender. They hold the hands of all the downtrodden people - men and women both - and they pull them out of misfortune as they try to improve their lives.

## The History of Women Empowerment

The history of women empowerment does not start from an exact date, It is a cumulative process. However, there are certain movements, protests, revolutions that furthered the cause of women empowerment much more speedily.

In the ancient days and even in the recent past, women, in hundreds of countries, were not allowed to vote. As time passed, more and more women came together and made their voices heard. Gaining voting rights significantly lifted the position of women in society. Many suffrage movements campaigned daily in support of women’s voting rights. In the US, individuals like Elizabeth Stanton and organisations like National American Woman Suffrage Association, National Woman’s Party played a key role in securing the voting rights for women. In the UK, the Women’s Social and Political Union aggressively campaigned for women’s suffrage. It is a shame for society at large when we consider that many countries granted women the right to vote after a very long time. Kuwait, Qatar, Zaire, Bahrain, Andorra, Central African Republic etc granted women the right to vote after the second half of the 20th century.

No woman can be empowered if she is not financially independent. Gone are the days when women had to depend on their fathers or husbands to get things that they wanted. From the 20th century onwards women got more opportunities to join the workforce. However, at the same time, many women in England were forced to

work both in the workplace and in the household to support the family. After the Second World War women, on their own, chose to join the workforce. Today more and more jobs are opening up for women. Women are proving to be worthy of the designations assigned to them.

In the household, too, women have gained significant decision-making powers. The decision to have a baby or not is now decided by both men and women. The use of contraceptive pills empowered women further. Women can now enjoy unhindered work life and education.

Women empowerment cannot be successful if the women in the lower rung of the society are not empowered. After the onset of the 21st century, women belonging to the grassroots level have found many vocational works, labours that were only reserved for men. Today there are many female masons, bus drivers, petrol pump attendants, farmers etc. And all these women are doing their job extremely well.

## Women Empowerment in India

Women empowerment in India cannot be compared with that in other countries. Women were highly respected in the Vedic ages. The focus on women's education was never absent. The word 'sahadharmini' was known from the Vedic days. Sahadharmini means - equal partner. It is thus very clear that women in India in ancient days enjoyed respect, education and reverence.

As time passed the Indian culture was contaminated with the conservative Middle Eastern and British culture. As a result, the power and respect that women enjoyed were lost.

Gradually after independence, women started regaining the lost power. Today women are everywhere. The country saw its female Prime Minister and President, the country has many eminent female sportspeople like Saina Nehwal or P.T Usha, the country has been blessed with talented women scientists like A. Chatterjee or B Vijayalakshmi. Women are joining the combat forces in India without any hesitation.

However, many women in India are still finding it hard to come out of the clutches of patriarchy - particularly in the rural sector. The empowered women must urge these women to raise voices, protest and seek help from the authorities.

## Inequality and the Way Forward

Today, more than ever, women are enjoying freedom. They can decide on their own. However, there is a long way to go. Women must protest against the use of

religion to suppress them. Not all military positions are open to females. There is a wage gap in the film industry, in sports and normal jobs. The women need to use their hard-earned power to banish all the injustices that they have been facing for time immemorial.

## Summary

The term women empowerment refers to gender equality. It especially favours women rights.

Women empowerment all refer to the empowerment of women to take all decisions from their choice. So that she can take all of the decisions for her social and economic development. Empowerment of women will surely encourage all of the women to stand for their education and the life of their own choice. The women empowerment mission encourages women to be self-reliant. So that she can have positive self-esteem and generate potential in herself to compete with the world and to make the position of her choice. This is only possible if equal opportunities in society will also be available for women. Empowering women would mean encouraging them for their socio-economic development. From ancient times women have suffered a lot in society. They were not given the equal right to education and to be self-reliant. They were only restricted to household works. They were kept away from education and development. Women constitute half of the population however her contribution to the economy of India is very low. This depicts that there are not equal opportunities available for women in society and the responsibilities which are given to them do not have any contribution to the GDP of the country.

To develop India as a superpower the development of women is equally important and it should be a priority to give her a chance to develop herself. To achieve it we should focus mainly on the education of girls. Moreover, they also get equal pay to the men for equal work. To empower the women our goals also should be to remove child marriage and the dowry system from the whole nation. The Indian government is also working to make India more suitable for women so they can also get equal opportunities and can grow themselves. In this regard, the supreme court of India also made it mandatory to provide admission to the National defence academy for women. The Indian government also declared that Military schools also will be available for women from now onwards. A common approach to handle this problem can be a remarkable solution for it.

■

# அகில இந்திய வேலை நிறுத்தத்தில் வருவாய்த்துறை அலுவலர்களின் பங்களிப்பு

## 10.02.1988 அகில இந்திய வேலை நிறுத்தம்

அகில இந்திய மாநில அரசுஊழியர் சம்மேளனம், மத்திய அரசு ஊழியர்களுக்கிணையாக மாநில அரசு ஊழியர்களுக்கு ஊதியம், அரசுஊழியர்களுக்கெதிராக உள்ள நடத்தை விதிகளை நீக்குதல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி 10-02-1988 அன்று நாடு முழுவதும் ஒரு நாள் வேலை நிறுத்தம் மேற்கொள்ள அழைப்பு விடுத்திருந்தது. இந்த வேலை நிறுத்தத்தை தமிழ்நாட்டில் மற்றச் சங்கங்களுடன் இணைந்து மேற்கொள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் முடிவெடுத்திருந்தது. அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பிரதிநிதித்துவப் பேரவை சென்னையில் கூடி, இந்த முடிவை எடுத்திருந்தபோது தமிழகத்தின் முதல்வராக எம்.ஜி.இராமச்சந்திரன் இருந்தார். 1985 ஜேக்டி போராட்டத்தை கடுமையாக அவரது அரசு அணுகியதால், அவரது ஆட்சிக் காலத்தில், 10-02-1988 வேலை நிறுத்தத்தை மேற்கொள்வதில் அனைத்துச் சங்கங்களுக்கும் தயக்கமிருந்தது. எனினும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கோரிக்கைகளின் நியாயத்தினை வலியுறுத்தி மாநிலம் முழுவதும் தீவிர பிரச்சாரத்தை மேற்கொண்டது. பிரச்சார இயக்கங்களில் கலந்துகொண்ட, ஆசிரியர் சங்கங்கள், தலைமைச் செயலக ஊழியர் சங்கம் உள்ளிட்ட சங்கங்கள் இறுதியில் வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்வதற்கான முடிவினை மேற்கொள்ள தயங்கின. இந்நிலையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தன்னந்தனியாக இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க வேலை நிறுத்தத்தில் இறங்கியது.

இதற்குள்ளாக, தமிழ்நாட்டில், முதல்வராக இருந்த எம்.ஜி.இராமச்சந்திரன் மறைந்து, ஆட்சியை பிடிப்பதில், ஜானகி அம்மாளுக்கும், செல்வி ஜெயலலிதாவிற்கும் மோதல் நடைபெற்று, ஜானகி அம்மாள் ஆட்சியைப் பிடித்திருந்தார். இந்த நேரத்தில் தான் 10-02-1988 வேலை நிறுத்தம் நடைபெற்றது.

மாநிலம் முழுவதும் சுமார் 10,000 ஊழியர்கள் கலந்துக் கொண்ட இந்த வேலை நிறுத்தத்தில், மாநிலம் முழுவதும், 6,000க்கு மேற்பட்ட வருவாய்த்துறை ஊழியர்கள் பங்கேற்றனர். இந்த வேலை நிறுத்தமே பிற்காலத்தில், ஜேக்டி-ஜியோ வேலை நிறுத்தத்திற்கு உத்வேகம் அளித்தது.

## புதுக்கோட்டை மாநில பிரதிநிதித்துவப் பேரவை 24.04.1988

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநில பிரதிநிதித்துவப் பேரவை புதுக்கோட்டையில் நடைபெற்றது. மாநிலம் முழுவதுமிருந்து 433 பிரதிநிதிகள் இந்தப் பேரவைக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். இப்பேரவைக் கூட்டத்தில், துறைவாரியான கோரிக்கைகளுக்கான போராட்டமும் திட்டமிடப்பட்டது. துறைவாரியான கோரிக்கைகளுக்காக ஒருநாள் வேலைநிறுத்தமும், பொது கோரிக்கைகளுக்காக ஜாக்டீ அமைப்புடன் இணைந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட முடிவெடுக்கப்பட்டது. இந்த முடிவின் அடிப்படையிலேயே வரலாற்று சிறப்புமிக்க 1988ஆம் ஆண்டு வேலை நிறுத்தப் போராட்டத்தில் வருவாய்த்துறை அலுவலர்கள் பங்கேற்றனர். 1988 மே 2 முதல் 5 வரை நடைபெற்ற மறியல் போராட்டத்தில் தமிழகம் முழுவதும், பல்லாயிரக்கணக்கான வருவாய்த்துறை அலுவலர்கள் பங்கேற்று சிறையேகினர். வட்டாட்சியர்களும், துணை வட்டாட்சியர்களும் மறியலில் பங்கேற்று சிறைக்கு சென்றது போராடும் அரசு ஊழியர்களுக்கு ஆசிரியர்களுக்கும் உற்சாகமூட்டியது.

பொதுக் கோரிக்கைகளுக்கான போராட்டங்களையும் துறைவாரியான கோரிக்கைகளுக்கான எப்போது நடத்த வேண்டும், எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதில் முடிவெடுக்க தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம் ஒருபோதும் தயங்கியது இல்லை.

## மத்திய அரசு ஊழியர்களுக்கிணையான ஊதியம் கேட்டு வேலை நிறுத்தம் (1988)

அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் இணைந்து நடத்திய வரலாற்றுச் சிறப்புமிக்க வேலை நிறுத்தப் போராட்டம் 1988, ஜுன் 22 முதல் ஜுலை 25-07-1988 வரை நடைபெற்றது. அன்றைய தினம் தமிழகத்தில் அதிமுக கட்சியில் ஏற்பட்ட அதிகாரச் சண்டை காரணமாக ஆளுநர் ஆட்சி நடைபெற்று வந்தது. மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த அலெக்ஸாண்டர் என்பவர் ஆளுநராக இருந்தார். மத்திய அரசிற்கிணையான ஊதியம் கேட்டு நடைபெற்ற இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் இணைந்து ஜாக்டி என்ற பெயரில் ஒரு கூட்டு இயக்கம் ஏற்படுத்தப்பட்டது. இந்த அமைப்பின் தலைமை பொறுப்பில் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் அன்றைய மாநிலத் தலைவர் எம்.சிவராஜ் இடம் பெற்றிருந்தார். ஆளுநர் அரசு கடுமையான அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டது. கூட்டமைப்பின் தலைவர்களை கைது செய்து சிறையில் அடைத்தது. அரசு ஊழியர் சங்கம், அரசுப் பணியாளர் சங்கம் மற்றும் ஆசிரியர் சங்கத் தலைவர்கள் சிறையிலடைக்கப்பட்டனர். ஆனால் காவல்துறையின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு தலைமறைவாக இருந்து, மாநிலம் முழுவதும் பயணம் செய்து, வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் ஊழியர்களுக்கு உற்சாகத்தை வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநிலத் தலைவர் எம்.சிவராஜ் ஏற்படுத்தினார்.

என்.ஜி.ஒ.சங்கம் ஆரம்பத்தில் இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. ஆனால் போராட்ட வீச்சின் காரணமாக இடையில் பங்கேற்று, ஆளுநர் அரசிடம் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு துரோக ஒப்பந்தம் செய்துகொண்டு மீண்டும் வேலைக்கு திரும்பிவிட்டது. எழுச்சியுடன் நடைபெற்று வந்த வேலை நிறுத்தத்தை உடைப்பதற்கான ஒரு சூழ்ச்சியாக இது அமைந்தது. ஆனாலும் தளராமல் ஊழியர்கள் வேலைநிறுத்தத்தை தொடர்ந்தனர். தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் நகர்புற துணைத் தலைவராக இருந்த எம்.கணேசபிள்ளை சென்னையில் போராட்டத்தை ஒருங்கிணைத்து செல்லும் பணியில் இதர தலைவர்களுடன் சேர்ந்து பணியாற்றினார். இறுதியில் ஆளுநர் அரசு பணிந்து பேச்சுவார்த்தை நடத்தியது. இதில் இடைக்கக்கால நிவாரணமாக ரூ.70 தருவதாகவும், சட்டமன்ற தேர்தல் நடைபெற்று, அமையவுள்ள புதிய அரசு மத்திய அரசிற்கிணையான கோரிக்கையை பரிசீலிக்கும் எனவும் அரசு தரப்பில் உறுதி தரப்பட்டது.

வரலாற்று சிறப்புமிக்க இந்த வேலை நிறுத்தத்தில் வட்டாட்சியர் முதல் அலுவலக உதவியாளர் வரையிலான ஆயிரக்கணக்கான வருவாய்த்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர். மாவட்டங்களில் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் கலந்துகொண்டு வருவாய்த்துறை அலுவலர்கள் சிறையேகினர். வட்டாட்சியர்களும், துணை வட்டாட்சியர்களும் பெருமளவில் பங்கேற்ற இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் மற்ற துறை ஊழியர்களுக்கு வருவாய்த்துறை அலுவலர்கள் உத்வேகம் ஊட்டக் கூடியவர்களாக இருந்தனர்.

போராட்டக் காலத்தில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அரசு ஊழியர்களுக்கு மத்திய அரசு ஊழியர்களுக்கிணையான ஊதியத்தை வழங்குவோம் என்று வாக்குறுதி அளித்தனர். திமுக ஆட்சியைப் பிடித்தது. மத்திய அரசு ஊழியர்களுக்கிணையான ஊதியத்தை வழங்குவதாக அறிவித்தது. ஆனால் அரசு ஊழியர்களின் ஆசிரியர்களின் ஒற்றுமையை சீர்குலைக்கும் வகையில் ஊதிய வேறுபாடுகளை உருவாக்கி அரசு ஆணையைப் பிறப்பித்தது. இந்த வேறுபாடுகளை களைய மீண்டும் போராட்டத்தை நடத்திட வேண்டியதாயிற்று.

■

Government of Tamil Nadu MANUSCRIPT SERIES

**FINANCE (Allowances) DEPARTMENT**

**G.O.Ms.No.15, Dated 18th January, 2023.**

*(Subakiruthu, Thai-4, Thiruvalluvar Aandu 2054)*

**ABSTRACT**

General Provident Fund - Ceiling of Rupees 5 Lakh on Subscription to General Provident Fund account in a financial year - Orders - Issued.

---

**Read the following:-**

1. G.O.(Ms.)No.461, Finance (Allowances) Department dated: 22.09.2009.

2. Government of India, Ministry of Personnel, PG & Pensions Department of Pension & Pensioners' Welfare, New Delhi, OM.F.No.3/13/2022-P&W(F) (8353), dated: 02.11.2022.

3. Letter received from the Principal Accountant General (A&E), D.O.Lr.No.PAG(A&E)/ FM 1/1/2022-23/151-40445, Dated 30.11.2022.

***

**ORDER**

In the Government order first read above, orders were issued capping the monthly Subscription of General Provident Fund @ 12% of the emoluments i.e. Basic Pay + GP+ SP+ PP+ DA with effect from 01.01.2009.

2. Government of India in the Office Memorandum second read above, issued instructions consequent to the maximum annual General Provident Fund Subscription limit Rs.5,00,000/- (Rupees Five Lakh only) being exceeded during current financial year in certain cases. Therefore, Government of India has instructed that further where General Provident Fund Subscription during the current financial year has already exceeded the threshold limit of Rs.5 lakh, no further deduction may be made and minimum monthly subscription of 6% of emoluments shall be deemed to have been relaxed. In case, where General Provident Fund subscription during the current financial year has not yet reached/ exceeded the threshold limit of Rs.5 lakh, further deductions towards General Provident Fund subscription during the current financial year may be phased out such that the total subscription during the current financial year does not exceed Rs.5 lakh. In case where the

total contribution is likely to exceed Rs.5 lakh even with minimum monthly subscription of 6% of emoluments, deduction of General Provident Fund may be stopped and the minimum monthly subscription of 6% of the emoluments shall be deemed to have been relaxed.

3. The Principal Accountant General (A&E) in the letter third read above has requested to indicate whether any action has been taken to extend the amendments carried out by Government of India to various provident fund accounts pertaining to Government of Tamil Nadu.

4. The Government has carefully examined the above instructions and decided to limit the maximum annual General Provident Fund Subscription at Rs.5 lakh to the various Provident Fund accounts of employees of Government of Tamil Nadu from the financial year 2022-2023.

5. The threshold limit of Rs.5 lakh being effected at the fag end of the present financial year, the subscription by a subscriber under General Provident Fund (Tamil Nadu) shall be regulated as follows:-

(a) In case of those Government servants, whose General Provident Fund subscription during the current financial year (e. 2022-2023) has already exceeded the threshold limit of Rs.5 lakh, no further deduction of General Provident Fund subscription may be made from their salary in the current financial year. In those cases, the provision regarding minimum monthly subscription of 12% of the emoluments shall be deemed to have been relaxed.

(b) In case of those Government servants, whose General Provident Fund subscription during the current financial year (Le.2022-2023) has not reached/exceeded the threshold limit of Rs.5 lakh, further deductions towards General Provident Fund subscription during the current financial year may be phased out in such a manner that the total subscription during the current financial year does not exceed Rs.5 lakh. In cases where the total contribution is likely to exceed Rs.5 lakh even with minimum monthly subscription of 12% of the emoluments, deduction of General Provident Fund subscription from the salary may be stopped as soon as the total contribution in the current financial year reaches Rs.5 lakh. In such cases also, the provision regarding minimum monthly subscription of 12% of the emoluments shall be deemed to have been relaxed.

6. Necessary amendment to the General Provident Fund (Tamil Nadu) rules shall be issued separately.

(BY ORDER OF THE GOVERNOR)

N.MURUGANANDAM

ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT

மாநில செயற்குழு கூட்ட முடிவுகள்


**தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்**

*(அரசாணை எண்.2141, பொதுத் (பணி-அ) துறை, நாள் : 6.10.66ன்படி அங்கீகரிக்கப்பட்டது)*

**THE TAMILNADU REVENUE OFFICIALS' ASSOCIATION**

***மாநில மையம்***

*க.எண்.12, கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005*


# 29.1.2023 அன்று நடைபெற்ற TNROA மாநில நிர்வாகிகள் ஆலோசனை கூட்ட முடிவுகள்

**த**மிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் கூட்டம் 29.1.2023 அன்று காணொளி காட்சி வாயிலாக நடைபெற்றது. இக்கூட்டத்தில் 15 மாநில நிர்வாகிகளும் கலந்து கொண்டு தங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை தெரிவித்தனர். இறுதியில் கீழ்க்கண்ட முடிவுகள் ஒருமனதாக எடுக்கப்பட்டன.

1) 2023ஆம் ஆண்டுக்கான உறுப்பினர் சேர்க்கையை வருகின்ற 28.2.2023க்குள் நிறைவு செய்து, மாநில மையத்தில் சேர்க்க வேண்டும் (உறுப்பினருக்கு தலா ரூ.100) என முடிவு செய்யப்பட்டது. மாநில அளவில் 15,000 என்ற இலக்கினை அடைய அனைத்து மாவட்டங்களும் இதில் முழுமையாக ஈடுபட வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

2) தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் போர்வாளாக விளங்கக்கூடிய "சங்கக்குரல்" மாத இதழுக்கான 100% சந்தா சேர்க்கைக்கு (தலா ரூ.200) மாவட்ட மையங்கள் முனைப்பான நடவடிக்கை எடுக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

3) 2023 உறுப்பினர் சேர்க்கை மற்றும் சங்கக்குரல் சந்தா சேர்க்கை ஆகிய இயக்கங்களை பிப்ரவரி முதல்/இரண்டாவது வாரத்தில் அனைத்து மாவட்டங்களில் எழுச்சியாக நடத்திட வேண்டும் எனவும், இதில் பொறுப்பு மாநில நிர்வாகிகள் கலந்து கொள்வதெனவும் முடிவு செய்யப்பட்டது.

4) 2021 சேலம் கோரிக்கை மாநாடு நிதி நிலுவை, TNGEA மாநாடு நிதி நிலுவை, 2022 & 2023 நாட்காட்டி நிலுவை மற்றும் 2023 நாட்குறிப்பு பங்களிப்புகளை மார்ச் மாதத்தில் நடைபெறவுள்ள மத்திய செயற்குழு கூட்டத்திற்கு முன்பாக முழுமையாக நிறைவு செய்ய மாவட்ட மையங்களை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

5) தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் அடுத்த மத்திய செயற்குழு கூட்டத்தை 2023 மார்ச் மாதத்தில் கூட்டுவதெனவும், நிலுவைக் கோரிக்கைகள் குறித்து மாவட்ட மையங்களின் கருத்துகளின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

(மாவட்ட மையங்கள் தங்கள் மாவட்ட நிகழ்வுகளை tnroasangakural@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.) ■

சுயசிந்தனை

# நம்பிக்கை விதை

**வா**ழ்க்கை என்பது துடுப்புடன் கூடிய ஓடம் போன்றது. அதனை அழகுற செலுத்துவதும் ஆர்வத்துடன் செலுத்துவதும் அவரவரின் திறமையை பொறுத்தது.

ஒருவரிடம் திறமை இருந்தால் மட்டுமே போதுமா? வாழ்க்கையில் முன்னேறி விடலாமா என்பது குறித்து நம்மில் பலருக்கு ஐயம் அவ்வப்போது ஏற்படுவதுண்டு. திறமையுடன் தன்நம்பிக்கையும் அவசியம், அது மட்டுமில்லாமல் பிறர் மீது நாம் வைத்திருக்கும் நம்பிக்கையும், அவ்வாறு வைத்திருக்கும் நம்பிக்கையும் சமயத்தில் சுயசிந்தனையுடன் பரிசோதித்து பார்ப்பது மிக அவசியமாகும்.

மௌரியப் பேரராசு எவ்வளவு பெரிய சாம்ராஜம் என்பது அனைவரும் அறிந்ததே. இந்த சாம்ராஜ்யம் எப்படி வீழ்ந்தது, அழிந்தது என்பதுதான் வேதனைக்குரிய விடயமாகும். சந்திரகுப்த மௌரியர், சாம்ராட் எனப் போற்றபட்ட அசோகர் என மாமன்னர்கள் அலங்கரித்த பேரரசு. முடிவில் எவ்வாறு அழிந்தது தெரியுமா? இப்பேரரசின் மன்னன் பிருகருதா அவனது தளபதி புஷ்யமித்திரன். தனது தளபதியின் மீது வைத்த அதீத நம்பிக்கையில் எப்படி வீழ்ந்தான் என்ற வரலாற்று வடுவினை அறியாதவர்கள் வெகுசிலரே.

புஷ்யமித்திரன், மனித வடிவில் பிறந்த நரி, அவனது பேச்சில் மயங்கியவர்கள் எவருமில்லை. எப்படியும் தன் மன்னனை கொன்று மௌரியப் பேரரசின் முடி சூட்டிக் கொள்ள வேண்டும் என்ற வெகுநாள் கனவு அவனுடையது. நேரம் பார்த்து கொண்டிருந்தான்.

அக்கால கட்டத்தில் மன்னர்கள் வீரர்களின் அணிவகுப்பை தேரிலோ, குதிரையிலோ அல்லது யானை மீதோ ஏறி முழு கவசத்துடன் மட்டுமே பார்வையிடுவார்கள். இது அப்பேரரசின் அன்றைய அரசியல் ஆலோசகராக கருதப்பட்ட சாணக்கியரின் வாக்கு. ஆனால் பிருகருதா, புஷ்யமித்திரன் மீது வைத்திருந்த நம்பிக்கையின் காரணமாகவும், சாணக்கியரின் வாக்கை துளியும் மதியாமல் பாசத்திற்குரிய தனது தளபதி தன்னை மோட்சம் அடையச் செய்யப் போகிறான் என்பதை அறியாமல் உடலில் கவசமில்லாமலும், உறையில் கத்தியில்லாமலும் அணிவகுப்பை காணச் சென்றான். விளைவு தனது விசுவாச பச்சோந்தி தளபதியால் பின்புறமிருந்து கொல்லப்பட்டான். தனது தளபதி மீது மன்னன் வைத்திருந்த நம்பிக்கை அவனது வாழ்க்கையையே சூறையாடி சென்ற வரலாற்று நிகழ்வு இது. நாம் நம்மீது வைத்திருக்கும் நம்பிக்கை ஒருபுறமிருந்தாலும் எதிரே இருப்பவரின் மனநிலையையும், அவரது சூழ்நிலையையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

நமது இதிகாசங்களிலும் நம்பிக்கையின் ஆணி வேரைத் தகர்த்த நிகழ்வுகளும் உண்டு. சான்றோர் பெருமக்கள் இதனை நன்கு அறிவார்கள் என்பதனை நான் உணர்கிறேன். இதுபோன்ற வரலாற்று நிகழ்வுகள் ஏராளமாக உள்ளன.

ஷேக்ஸ்பியரின் ஜூலியஸ் சீசர் நாடகத்தில் வரும் கதாபாத்திரங்கள் கூட சற்றே நம்பிக்கையின் மீது வைத்த நம்பகத்தன்மையை நலிவுறச் செய்கிறது. ரோமாபுரி பேரரசின் மக்கள் புரூட்டஸ் மீது வைத்திருந்த நம்பிக்கையும் தவிடுபொடியானதுதான் மிச்சம்.

நாம் நம்பிக்கையை எந்த அளவிற்கு பிறர் மீது வைத்திருக்க வேண்டும். அந்த நம்பிக்கை பிறரின் வாழ்க்கைக்கும், வளர்ச்சிக்கும் எவ்விதத்திலும் கேடு விளைவிக்கக் கூடாது.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
அன்றே மறப்பது நன்று"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கை அன்றே மறவாமல், அவ்வினாடியே மறக்கும் நம்பிக்கை துரோகிகள் தாராளமாக உலகை வலம் வருவார்கள். அவர்களிடமிருந்து பாதுகாப்பாக இருப்பதும் பக்குவமாக இருப்பதும் நமக்கு நலத்தையே பயக்கும். ஏராளமானவர்கள் எவர் என்பதை உங்கள் சிந்தனைக்கே விட்டுவிடுகிறேன்.

ஒரு சிலரின் மீது நாம் அளவு கடந்த அன்பையும் நம்பிக்கையையும் வைத்திருப்போம். சகுனி போன்ற சிலர் நம்மிடமே அச்சிலரைப் பற்றிய கட்டுக்கதை, அவதுறான செய்திகள் பரப்புவார்கள். அந்தக்கால சகுனியை மிஞ்சும் அளவிற்கு நஞ்சினை பாய்ச்சுவார்கள். அப்பழுக்கற்ற அவர்களை தூற்றுவார்கள். அவர்கள் மீது சேற்றினை வீசுவார்கள். இன்றைய சகுனிகள் நவீன தொழில்நுட்பம் வாயிலாகவும் இதனை திறம்பட செய்யவார்கள். இவ்வாறான சகுனிகளின் வார்த்தைகளையும் செய்கைகளையும் நாம் ஒருபோதும் கண்மூடித்தனமாக நம்பிவிடக் கூடாது.

"குற்றவாளியை தண்டிப்பதைவிட அவர் புரிந்த குற்றத்திற்கான காரணத்தை கண்டறிந்து அந்த காரணத்திற்கு தண்டனை கொடு என்று இரசிய மாமேதை ரூசோ சொன்னதாக நினைவுக்கு வருகிறது. ஒருவர் மீது நாம் நம்பிக்கை வைத்திருக்கிறோம். அந்த நம்பிக்கை அவநம்பிக்கையாக மாறும் போது அதற்கான காரணத்தை கண்டறிந்து அதனை சரிசெய்ய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். எதனையும் ஆராய்ந்து முடிவெடுப்பதும், தீர விசாரித்து ஒருவர் மீது நம்பிக்கை வைப்பதும் இக்கால சூழலில் நம் வாழ்க்கையை மென்மையாக்குவதோடு மேன்மையானதாகவும் உருவாகச் செய்யும்.

நமது வாழ்வில் பல நம்பிக்கை துரோகிகளை சந்திக்கலாம். அவர்களால் நமது வாழ்க்கையே சூறாவளி என்ற அரக்கன் பிடியில் சிக்கி சின்னாபின்னமாகும். எனினும் அதனால் துவண்டு விடாமலும், அதனையே பயன்படுத்தி நாம் வலிமையடையவும் வேண்டும். அதற்கு உந்து சக்தியாக தன்னம்பிக்கை நம்முன்னே ஊற்றெடுக்க வேண்டும்.

"பாதகம் செய்பவரை கண்டால் பயங்கொள்ளலாகாது பாப்பா
மோதி மிதித்து விடு பாப்பா அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா"

என்று குழந்தைகளுக்கே வீரம் செறிந்த வார்த்தைகளை தெறிக்கவிட்ட முண்டாசு கவிஞன் பாரதியின் வரிகளை தன்னம்பிக்கை நெருப்புகளாக எரியச் செய்ய முனைய வேண்டும்.

ஒருவரை உங்களுக்கு பிடித்துவிட்டால் சிறிது சிறிதாக மேம்போக்காக இல்லாமல் ஆழமாக ஏற்றுக் கொள்ளப் பழகுங்கள் ஆழத்தில் தான் தெளிவு பிறக்கும். ஆழ்ந்த நீரோடையில் தான் பொருட்கள் தென்படும்.

உலகில் பலர் வாழ்வில் பல்வேறு தோல்விகளை சந்தித்துள்ளார்கள். அந்த தோல்விகளையே அவர்கள் மூலதாரமாக எடுத்துக் கொண்டார்கள். அதற்கு காரணம் அவர்கள் தங்கள் மீது வைத்த நம்பிக்கையே காரணம். அதனையே வெற்றிப்படிகளாக மாற்றிக் கொண்டார்கள். அமெரிக்க அதிபர் ஆபிரகாம் லிங்கள், அறிவியலாளர் தாமஸ் எடிசன் போன்ற பலரை நினைவு கூறலாம். இருட்டுக்கு வெளிச்சம் கொடுப்பது எப்படி என்று அறிந்து கொண்டோமோ, அதேபோல் தோல்வி நிலையிலிருந்து வெற்றி எல்லையை தொடுவதையும் தெரிந்து கொள்ள முயல வேண்டும்.

உலகையும், சூழலையும் மாற்றுவதை காட்டிலும் ஒருவர் மீதான நம்பிக்கையை நேர்மறையானதாக மாற்ற வேண்டும். சமூகத்தின் பேச்சுக்கும், கருத்துக்களுக்கும் நாம் அடிமையாகிவிடக் கூடாது. உங்களுக்குள்ளான ஒவ்வொரு உணர்வையும் வெளிச்சம் கொடுக்கும் தீப்பொறிகளாக வெளிக்கொணர வேண்டும். நம்பிக்கை துரோகம் செய்துவிட்டான் என்று சதா புலம்பிக் கொண்டிராமல், நமக்குள் இருக்கும் ஆற்றலை நெம்புகோலின் உந்து சக்திபோல் முன்னிலைப்படுத்தி வாழ்க்கையினை செம்மைப்படுத்தி கொள்ள வேண்டும்.

நம்மில் பலர் வெற்றி பெற்றதனால் அதனை நினைத்து பெரிய பெரிய கொண்டாட்டங்கள், களியாட்டங்களில் திளைப்பதுண்டு. தோல்வியை நினைத்து கண்ணீர் வடிப்பதுண்டு. இச்செயலினை தேவையற்றதாகவே ஒரு சிலர் கருதுவார்கள். கொண்டாட்டங்கள் மகிழ்ச்சியை ஏற்படுத்தும். அதுவே மற்றவர்களின் இகழ்ச்சிக்கும் ஆளாகக்கூடும். எனினும் அவற்றைப்பற்றி சிந்திக்காமல் மென்மேலும் முன்னேற வழிவகைகளை வகுத்துக் கொள்ள வேண்டும். அதேபோல கண்ணீர்துளிகளை கொண்டே பன்னீர் பூக்களை உருவாக்க வேண்டும்.

அவன் அப்படி, இவன் இப்படி என்று நாம் நம்பிக்கை வைத்திருக்கும் ஒருவர் நம்மை பற்றியே பிறரிடம் வசைபாடக் கூடும். அத்தகையச் செய்தி நம் செவிபட வரவும் கூடும். அப்போதுதான் நாம் உணர்வை வெளிப்படுத்தாமல் மனதை ஒருநிலைப்படுத்தி அந்த நம்பிக்கை துரோகியை அடி மனதிலிருந்து விலக்கி வைக்க வேண்டும். எதிர்காலநிலையில் அவரின் ஆறுதலோ அவசியமோ தேவையானால்கூட ஒருபோதும் ஏற்றுக் கொள்ளக்கூடாது என்ற நிலைப்பாட்டை மனதில் விதைத்துக் கொள்ள வேண்டும்.

”விதைத்தால் மரம் இல்லையேல் உரம்” என்ற தாரக மந்திரத்தை உச்சரித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

ஒருவன் மீது நாம் நம்பிக்கை வைக்கும்போது அவன் நம்மைப் போலவே, நம் எண்ணங்களைப் போலவே இருக்க வேண்டும் என்று நினைப்பது தவறு. இந்த உலகில் ஒவ்வொருவரும் பல்வேறு விதமானவர்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு குணத்தை கொண்டவர்கள். கோயிலில் இருந்து வருபவர்களும், குட்டையில் மூழ்கிவிட்டு வருபவர்களும் மனிதர்களாக இருப்பினும் அவர்களின் மனிதத்தை தரம் பிரித்து அறிதல் வேண்டும். துரோகிகளுக்கு வாழ்த்துகள் அனுப்புவோம், அவை நமக்கு வரங்களாக மாற்றும் என தன்னம்பிக்கை கொள்வோம்.

ஒரு செயலை செய்வதற்கு நம்பிக்கை அவசியமில்லை. தன்னம்பிக்கை மட்டுமே மூலதனம். நம்பிக்கை அடுத்தவர் மூலமாக கிடைப்பது தன்னம்பிக்கை உங்கள் மூலாதாரமாக இருப்பது. அடுத்தவனை பகுப்பாய்ந்து நம்ப வேண்டும். உங்கள் புத்திசாதுர்யத்துடன் தெளிந்து ஆய்ந்து கொள்ள வேண்டும்.

‘அழகாய் அமைவுதெல்லாம் வாழ்க்கை அல்ல, அமைவதை அழகாய்
மாற்றுவதே வாழ்க்கை’ யாரோ சொன்னது நினைவுக்கு வருகிறது.

நம் எண்ணங்கள் மிகவும் வலிமையானவை. நம் இயக்க முன்னோடிகளின் வழிகாட்டுதல்கள் அவற்றினும் மேலானவை. அவற்றை பூக்களாகவும் தூவலாம், கற்களாகவும் எறியலாம். முதலாவது மாலையாகலாம், இரண்டாவது நம்மை காயப்படுத்திடலாம். எது நமக்கு உகந்தது என்று நாம்தான் முடிவு செய்ய வேண்டும்.

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம் எனும் நமது இயக்கத்தின் முயற்சிகள் இலக்கை நோக்கியே இருக்கும். மாநில நிர்வாகிகளின் பயணம் இலட்சியத்தை அடைவதாகவே

இருக்கும். அந்த இலட்சியவாதிகளுக்கு எந்த எதிர் செயலும், எதிரியின் செயலும் துச்சமாகவே புலப்படும். இலட்சியப் பயணத்தில் பயணிப்போம். தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம் என்ற இயக்கத்தின் பின் செல்வோம். இயக்கத்திற்கு பக்கபலமாகவும், பாலமாகவும் இருப்போம். துணிவும் நேர்மையும் நம் எண்ணங்களை உயர்த்தும். தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம் என்ற பேரியக்கத்தை தன்னம்பிக்கை அச்சாரமாக கொள்வோம்.

**ஒன்றுபடுவோம் போராடுவோம் வெற்றிபெறுவோம்"**

தோழமையுடன்,
க.ராஜகுமார், மாவட்ட செயலாளர்
தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்,
காஞ்சிபுரம் மாவட்ட மையம்
(தனி வட்டாட்சியர் (நிஎ),
சென்னை-கன்னியாகுமரி தொழிற்தட திட்ட
(CKICP), காஞ்சிபுரம் அலகு)

# வருவாய்த்துறை அலுவலர்களின் வாழ்வாதார கோரிக்கைகளை வலியுறுத்தி 24.1.2023 அன்று சென்னையில் நடைபெற்ற "பெருந்திரள் முறையீடு இயக்கத்தில்" 38 மாவட்டங்களை சேர்ந்த நிர்வாகிகள் எழுச்சியாக கலந்து கொண்டனர்.




29.1.2023 அன்று காணொலி வாயிலாக நடைபெற்ற
சங்கத்தின் மாநில நிர்வாகிகள் கூட்டம்



தேனி மாவட்ட புதிய நிர்வாகிகளின் பதவியேற்பு விழாவில் மாநில செயலாளர் தோழர் தமிழரசன் கலந்துகொண்டு உரையாற்றினார்




திருப்பத்தூர் மாவட்டத்தின் பொதுக்குழு கூட்டத்தில் மாநில துணைத் தலைவர் அர்த்தனாரி மற்றும் முன்னாள் நிர்வாகி ஜி.கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

Printed and Published by M.P.Murugaian on behalf of Tamil Nadu Revenue Officials' Association and Printed at Sekar Offset Printers, 168/1, Big Street, Chepauk, Chennai - 600 005 and published from No: 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600005. Editor K.Kumaresan.



கள்ளக்குறிச்சி மாவட்ட நிர்வாகத்தின் ஊழியர் விரோத போக்கை கண்டித்து
மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 3.1.2023 அன்று கருப்புப் பட்டை அணிந்து
கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது



செங்கல்பட்டு மாவட்ட பொதுக்குழுவில்
மாநில துணைத் தலைவர் தோழர்
மணிகண்டன் பங்கேற்று
சிறப்புரையாற்றினார்



திருப்பத்தூர் மாவட்டத்தின் பொதுக்குழு
கூட்டத்தில் மாநில துணைத் தலைவர்
அர்த்தனாரி மற்றும் முன்னாள் நிர்வாகி
ஜி.கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் கலந்து
கொண்டு சிறப்புரையாற்றினர்




சேலம் வருவாய் அலகில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய்
ஆய்வாளராக பணியாற்றி வரும் திருமதி. எல்லம்மாள், என்பவருக்கு 'TNROA காப்பீடு
திட்டத்தின் கீழ் மருத்துவ நிதியாக ரூ.25,000/ம் வழங்கப்பட்டது

"VARUVAITHURAI ALUVALAR SANGA KURAL" Under Postal Regd No. : TN/CH(C) / 295 / 15-17
February 2023 RNI No. TN BIL 2000 / 3800 Dt : 6.6.2002

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை 2.1.2023 அன்று தலைமைச் செயலகத்தில் பல்வேறு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து சுமார் 16 இலட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறும் வகையில் 4 சதவிகித அகவிலைப்படி உயர்த்தி வழங்கியமைக்காக நன்றி தெரிவித்து, புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டனர்

Publishing Date 3rd Week of Every Month
Registered New Paper
POSTED AT EGMORE RMS/1 PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM /
UNDER LICENCE NO. TNPMG (CCR) / WPP. 3 / 2015-2017

பெறுநர் :
திரு / திருமதி




If undelivered Please Return to :
தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்
பழைய எண். 38/2, புதிய எண். 12,
கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம்,
சென்னை - 600 005



**Printed and Published by M.P.Murugaian on behalf of Tamil Nadu Revenue Officials' Association and Printed at Sekar Offset Printers, 168/1, Big Street, Chepauk, Chennai - 600 005 and published from No: 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600005. Editor K.Kumaresan.**